[1981 மே 14

திரு. ஏ. சி. சண்முகம்:—தலைவரவர்களே, இரண்டு திரை அரங்குகளைக் கட்டு து பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது தொடங்கப்படும். மாநகராட்சியே பெங்களூரில் உள்ள 'டிரைவ் இன் தியேட்டர், மாதிரி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலுக்காக இந்த இரண்டு திரை அரங்குகளையும் 2 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறது. டிரைவ் இன் தியேட்டரைப் பொறுத்தவரை ஏற்கெனவே பொதுப்பணித் துறை மெரீனா கடற்கரையில் கட்டுவதாக ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறது. அப்படி பொதுப்பணித்துறை கட்டவில்லை என்றால் மாநகராட்சி கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கோம்பை ரங்கநாதர் கோவிலில் இருந்து ராமக்கல் மெட்டுவரை பாதை போடுதல்

*வினா எண். 1032—திரு ஆர். டி. கோபாலன்: திரு வே, இரா. ஜெயராமன்: மற்றும் திரு. கா. கோபாலகிருஷ்ணன் மாண்புமிகு உள்ளாட்சிதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கோம்பை ரங்கநாதர் கோவில் அடிவாரத்திலிருந்து ராமக்கல் மெட்டுவரை கேரள எல்லையிலுள்ள பாதையுடன் இணைக்கும் பாதை போட அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு, ஆர், டி, கோபாலன்: தலைவரவர்களே, இந்த கோம்பை ரங்கநாதர் கோவில் அடிவாரத்திலிருந்து போடப்படும் சாலைக்கு எப்போது வேலை தொடங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த சாலை மொத்தம் 15 கிலோமீட்டர் நீளம் உள்ளது. இதற்கு மதிப்பீட்டுச் செலவு 70 இலட்சம் ரூபாய். இது 1981–82–வது மாவட்ட பெரும் சாலைகன் திட்டமாக இறுதிப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. வேலைகள் சீக்கிரமாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவுடன் தொடங்கப்படும்.

நாட்டாற்றின் குறுக்கே வண்டிப்பாலம் கட்டும் திட்டம்

*வினா எண். 1033— திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் மாந்தை கிராம எல்லையில் நாட்டாற்றில் நெடுஞ்சாலைத்துறை கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலம் வண்டிப்பாலம் கட்ட ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு?

(இ) ஒப்பந்ததாரர் யார்?

(ஈ) ஒன்றியப் பொது நிதியிலிருந்து எவ்வளவு பணம் எந்த தேதியில் செலுத்தப்பட்டுள்ளது?

(உ) ஆரம்ப வேலைகள் துவக்கப்பட்டு விட்டனவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு—(அ) இந்த வேலை ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது

(ஆ) ரூ. 3,24,000

(இ) திரு. ஆர். கே. ஏ. பொன்னுசாமி காங்கேயர், சீனிவாசபுரம், தஞ்சாவூர்.

(ஈ) மொத்த மதிப்பீட்டில் ரூ. 2,36,000-யை குத்தாலம் ஊராட்சி-ஒன்றிய ஆணையர் நெடுஞ்சாலைத்துறைக்கு நாள் 25-9-79-ல் செலுத்தியுள்ளார்.

(உ) வேலை இப்பொழுது துவக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துறையின் பணியாளர்களுக்கான பணி விதிகள்

*வினா எண். 1034—திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊர்நல அலுவலர்கள், உதவியாளர்கள் இவர்களுக்கு ஒரே பணி விதி ஆணையிடப்பட்டும் நாளதுவரை அமுலாக்கப்படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம்எனில் எப்போது அமுலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு—(அ) மற்றும் (ஆ)

ஊரகவளர்ச்சித்துறையின் பல்வேறு பணியாளர்களுக்கு ஒரே பணி விதிகள் ஏற்படுத்துவது பற்றி செயற்குறிப்பு இன்னும் ஆய்வு நிலையிலேயே உள்ளது. விதிகள் வெளியிட்ட பின்னர் அமுல் செய்யப்படும்.